IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.144/2023

DEPOSITION OF WITNESS P.W.6

| | | |
|---|---|---|
| NAME | : | BABU |
| FATHER'S NAME | : | SEEMAIRAJAN |
| VILLAGE | : | VELLORE |
| OCCUPATION | : | DOCTOR |
| AGE | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 9th day of January 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்பொழுது வேலூர் அரசு மருத்துவமனையில் அரசு முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16.01.2022 அன்று குடியாத்தம் அரசு மருத்துவமனையில் முழு நேர பணியில் இருந்த போது அன்று காலை 10 மணியளவில் ரேவதி க/பெ. குமரவேல் சேத்துவண்டை என்பவர் தன்னை இரண்டு தெரிந்த ஆண் நபர்கள் அடித்ததாகவும், முதலுதவி சிகிச்சை அளிக்குமாறு கேட்டார். நான் அவரை பரிசோதனை செய்து பார்த்ததில் உதட்டிற்கு கீழேயும், கண்ணிற்கு கீழேயும் சிராய்ப்பு காயங்கள் இருந்தது. அதற்கு முதல் உதவி சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதித்தேன். மேற்கண்ட நபருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயம் என்று சான்று அளித்துள்ளேன். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு கண்ணின் கீழ் காயம் ஏற்பட்டதாக கூறியுள்ள நிலையில் மேல் சிகிச்சைக்காக அவருக்கு பரிந்துரை செய்யவில்லை என்றால் சொற்பகாயம் என்பதால் பரிந்துரை செய்யவில்லை. கண் மருத்துவரிடம் இருந்து எந்த பரிந்துரையும் நான் பெறவில்லை என்றால் சரிதான். மேலும் வழக்கில் காயம்பட்ட நபருக்கு கழுத்தில் எந்த காயத்திற்கும் நான் சிகிச்சை அளிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி காயங்கள் கட்டையால் அல்லது கொம்பால் அடித்தது போல் அழுத்தமாக இல்லை என்றால் சரிதான். சிராய்ப்பு காயங்கள் தான் இருந்தது. மேற்சொன்ன காயங்கள் தரையில் அல்லது சொரசொரப்பான பகுதியில் கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை**

**Sd/-R.Saranya.,**
**Judicial Magistrate,**
**Gudiyatham.**